**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| வழக்கு எண் | SCOP | 249 | of | 2023 |
|---|---|---|---|---|

**2028-ம் ஆண்டு ஜுன் திங்கள் 5-ம் நாளான இன்று**

| | |
|---|---|
| **வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** | **தரப்பில் ம.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.பிரபாகரன் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.** |

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **மோகன துளசி** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-05.06.2026**

**ம.சா.-1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

2006 ல் மணி 3 ம் எதிர்மனுதாரர் குடும்பத்தை அணுகி தன் மனைவி 3 பெண் பிள்ளைகளை விட்டுவிட்டு சென்றுவிட்டதாக சொல்லி பெண் கேட்டார் என்றால் சரியல்ல. முதலில் அதற்கு 3 ம் எதிர்மனுதாரர் குடும்பத்தார் ஒப்புக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. பஞ்சாயத்தில் முடிவாகி என் தாயார் கையொப்பம்இட்டு கொடுத்துவிட்டு அவராகவே சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. 2006 ல் மணி 3 ம் எதிர்மனுதாரரை திருமணம் செய்து அவர் மூலம் பிறந்தவர்கள்தான் எதிர்மனுதாரர் 4,5 என்றால் சரியல்ல. 2006 முதல் அவர்கள் குடும்பமாக நெ.52, 14th avenue, DAV township

கல்பாக்கத்தில் வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அந்த முகவரியில் வசித்து வந்த போதுதான் 2018 ல் விபத்துகுள்ளானார் என்றால் விபத்து நடந்தது 2018 தான். பணிபதிவேட்டில் மணி எதிர்மனுதாரர்கள் 4 மற்றும் 5 பெயர்களை பாரம் 3 குடும்ப விவரத்தில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. Grautity, provident fund ஆகியவற்றிலும் 4,5 எதிர்மனுதாரர்கள் பெயர்களை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. இந்த தகவல்களை 5 ம் எதிர்மனுதாரர் ஊர்ஜிதம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மணி இறக்கும் வரை நாங்கள் எதிர்மனுதாரர்கள் 3 முதல் 5 ஐ கேள்வி கேட்க வில்லை என்றால் சரியல்ல. அவர் இறந்த பிறகு மேற்படி முகவரிக்கு அடியாட்களுடன் சென்று தகராறு செய்து பொருட்களை சேதப்படுத்தினோம் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக போலீசார் சிஎஸ்ஆர் பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல. எஸ்டேட் ஆபிசர் கல்பாக்கம் அவர்களிடம் 3 ம் எதிர்மனுதாரர் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த புகாரை பெற்று அவர் ஒப்புகை கடிதம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மணியின் இறப்பு பலன்களை கேட்டு 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் விண்ணப்பித்தார்கள் என்றால் அதுபற்றி தெரியவில்லை.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

T
CHANDRASEKARAN

Digitally signed by T
CHANDRASEKARAN
Location: Principal
District Judge,
Chengalpattu